**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093873

1. District மாவட்டம் : விருதுநகர் PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு விருதுநகர் Year: ஆண்டு 2022 FIR No.: மு.த.அ. எண் 01/2022 Date: நாள் 07.02.2022

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7 of Prevention of Corruption (Amendment) Act 2018
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 03.02.2022 Date from : நாள் முதல் 11.45 Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 07.02.2022 Time : நேரம் 16.00 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் மேற்கு 40 கி.மீ/தென்மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.திருமலைராஜன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.கோபாலகிருஷ்ணன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 04.06.1971 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் தீப்பெட்டி உற்பத்தி தொழில் (g) Address : முகவரி 1/405, வெங்கடாசலபுரம், சாத்தூர் தாலுகா, விருதுநகர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு.சந்திரசேகர், ஊராட்சி செயலர், மேட்டமலை ஊராட்சி, சாத்தூர் ஒன்றியம், விருதுநகர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது,

நான் இன்று 07.02.2022 மாலை 16.00 மணிக்கு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது விருதுநகர் மாவட்டம். சாத்தூர் தாலுகா. வெங்கடாசலபுரம், கதவு எண் 1/405, என்ற முகவரியை சேர்ந்த திரு. கோபாலகிருஷ்ணன் என்பவரின் மகன் திரு. திருமலைராஜன் என்பவர் என்முன் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று மேற்படி மனுமீது இரகசிய விசாரணை செய்ததில் எதிர்மனு எதிர்மறையான குறிப்புகள் இருந்ததாலும், வழக்குப்பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருந்ததாலும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை தென்சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து வாய்மொழியாக தகவல் தெரிவித்து விட்டு (தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது).

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

07.02.22

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு (signature) 7.2.2022

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

K. RAMACHANDRAN.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
07.02.2022 at 18.30 hrs

Name: பெயர் K. RAMACHANDRAN
Rank: நிலை DSP, V&AC, VNR. No. எண் ..........

விருதுநகர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 01/2022 பிரிவு 7 of pc (Amendment) Act 2018ன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி

இன்று (07.02.2022) மாலை 18.00 மணிக்கு விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பரிவு குற்ற எண். 01/2022 பிரிவு 7 of pc (Amendment) Act 2018 ஆக எதிரி திரு.கதிரேசன், ஊராட்சி செயலர், மேட்டமலை ஊராட்சி, சாத்தூர் ஊராட்சி ஒன்றியம், விருதுநகர் மாவட்டம் என்பவர் மீது வழக்கு பதிவு செய்தேன். அந்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு :- அனுப்புனர் திரு.கோ.திருமலைராஜன், த/பெ.கோபாலகிருஷ்ணன், கதவு எண்.1/405, வெங்கடாசலபுரம், சாத்தூர் தாலுகா, விருதுநகர் மாவட்டம். பெறுநர் காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, விருதுநகர். அய்யா, நான் சாத்தூர் தாலுகா, வெங்கடாசலபுரத்தில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். என் வீட்டின் அருகே வேலையாட்கள் வைத்து, மருந்துடன் கூடிய தீப்பெட்டி குச்சிகளை வாங்கியும், தீப்பெட்டி காலி அட்டை பெட்டிகளை வாங்கியும் அந்த காலி பெட்டிகளில் குச்சிகளை அடுக்கி பார்சல் செய்து அனுப்பி வைக்கும் தொழில் சீத்தாலட்சுமி மேச் ஒர்க்ஸ் என்கிற பெயரில் செய்து வருகிறேன். எனது தகப்பனார் திரு.கோபாலகிருஷ்ணன் சாத்தூர் ஊராட்சி ஒன்றியம், மேட்டமலை ஊராட்சிக்குட்பட்ட மடத்துக்காடு கிராம பட்டா எண்.232-இல் அவரது பெயரில் உள்ள 5 ஏக்கர் 73 செண்ட் (சர்வே எண்கள்.35/5, 40/4, 41/1) நிலத்தை சாத்தூர் சார்பதிவு அலுவலக ஆவண எண்.4020/2006-இன்படி எனக்கு தானசெட்டில்மெண்ட் மூலம் பத்திரம் பதிவு செய்து கொடுத்தார். நான் அந்த நிலத்தில் சர்வே எண்.41/1D கொண்ட 68 செண்ட் நிலத்தை எனது மனைவி திருமதி.வசந்தாவிற்கு சாத்தூர் சார்பதிவக அலுவலகத்தில் ஆவண எண்.3376/2017-இன்படி தானசெட்டில்மெண்ட் மூலம் பத்திரப்பதிவு செய்து கொடுத்தேன். நான் அந்த இடத்தில் எனது மனைவி திருமதி.வசந்தா பெயரில் புதிதாக பட்டாசு கடை அமைக்க கட்டிட வரைபட அனுமதி வேண்டி விண்ணப்பம் தயார் செய்து, அத்துடன் கட்டிட வரைபடம் மற்றும் ஆவணங்களை இணைத்து கடந்த 29.01.2022ஆம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் மேட்டமலை பஞ்சாயத்து ஆபிசுக்கு சென்று பஞ்சாயத்து கிளார்க் திரு.கதிரேசன் அவர்களை சந்தித்து கொடுத்தேன். அப்போது அவர் அந்த விண்ணப்பத்தை வாங்கி வைத்து கொண்டு, இப்ப வேற வேலை இருக்கு இரண்டு, மூன்று நாள்கள் கழித்து வந்து என்னை பாருங்க என்று சொன்னார். நான் சரிங்க என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். அதனால், நான் கடந்த 03.02.2022ஆம் தேதி காலை சுமார் 11.45 மணியளவில் மேட்டமலை பஞ்சாயத்து ஆபிசுக்கு சென்று பஞ்சாயத்து கிளார்க் திரு.கதிரேசன் அவர்களை சந்தித்து என் மனைவியின் கட்டிட வரைபட அனுமதி விண்ணப்பம் சம்பந்தமாக கேட்டேன். அப்போது அவர் என்னிடம் ரூ.51,580/-ஐ கொடுங்க என்று கேட்டார். அதற்கு நான் அவரிடம் எதுக்கு சார் அவ்வளவு பணம் என்று கேட்டேன். அதற்கு அவர் பஞ்சாயத்திற்கு கட்ட வேண்டிய கட்டணங்கள் ரூ.31,580/- என்றும்,

எனக்கு தனியா ரூ.20,000/- தரவேண்டும் என்றும் கூறினார். அதற்கு நான் அவரிடம் உங்களுக்கு தனியா 20,000/-ரூபாய் தரவேண்டுமா என்று கேட்டேன். அதற்கு அவர், இது கட்டிட வரைபட அனுமதி வேண்டி விண்ணப்பிப்பவர்கள் அனைவரிடமும் வாங்குற பணம்தான் என்றும், உங்ககிட்ட மட்டும் நான் கேக்கல என்றும் கூறி கட்டாயம் பஞ்சாயத்திற்கு கட்ட வேண்டிய கட்டணங்கள் ரூ.31,580/- மற்றும் எனக்கு தனியா தரவேண்டிய பணம் ரூ.20,000/- ஆக மொத்தம் ரூ.51,580/-ஐ கொண்டு வாங்க என்றும், அந்த பணம் ரூ.51,580-ஐ ரெடிபண்ணி கொண்டுவந்து என்னிடம் கொடுத்தால்தான், நீங்கள் கொடுத்த விண்ணப்பத்தின்மீது நடவடிக்கை எடுத்து, கட்டிட வரைபட அனுமதி கிடைக்க ஏற்பாடு செய்வேன் என்றும் கண்டிப்பாக கூறினார். ஆனால் அவருக்கு லஞ்சப்பணம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. இருந்தாலும் நான் வேறுவழியில்லாமல் அப்போது அவரிடம் சரியென்று சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். என் மனைவியிடம் நடந்த விபரத்தை சொன்னேன். அவரும் லஞ்சம் கொடுக்க வேண்டாம். லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் செய்யலாம் என்று சொன்னார். அன்றைய தினம் எங்களிம் அவ்வளவு பணம் இல்லாததால், அந்த பணம் ரூ.51,580-ஐ இன்று (07.02.2022) மதியம்தான் ரெடிபண்ணினேன். என் மனைவி திருமதி.வசந்தா பெயரில் பட்டாசு கடை அமைக்க உள்ள கட்டிடத்திற்கு கட்டிட வரைபட அனுமதி வேண்டி கொடுத்த விண்ணப்பத்தின்மீது நடவடிக்கை எடுத்து, கட்டிட வரைபட அனுமதி கிடைக்க ஏற்பாடு செய்வதற்கு என்னிடம் லஞ்சமாக ரூ.20,000/- பணத்தை கேட்ட மேட்டமலை பஞ்சாயத்து கிளார்க் திரு.கதிரேசன் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, (sd) G.Thirumalairajan 7/2/2022 Sir, Received the compliant on 07.02.2022 at 16.00 hrs. The genuines of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found bad. Found prima-facie for the allegation of the complainant. Since the registration of regular case is warranted. The matter is intimated to the SP / SR, V&AC, Chennai and registered a case in Virudhunagar V&AC Cr.No.01/2022 u/s 7 of P.C. (Amendment) Act-2018 on 07.02.2022 at 18.00 hrs and took up for investigation. (sd) K.Ramachandran 07.02.22, DSP/V&AC/VNR.

The Original FIR along with original complaint is submitted to the Hon'ble CJM/Spl.Judge for PC Act cases, Srivilliputhur and the copies submitted to the concerned officers.

07.02.22

(K.RAMACHANDRAN)
DSP/V&AC/VNR.